கடற்கரை கவியரங்கு எண் - 616

நாள் 07-08-2022

## வாழ்வியல்!

எதையோ தேடி அலைகின்றோம்!
அதனால் எதையோ பெறுகின்றோம்!
மதமாய் மனத்தை ஆளுகின்றோம்!
மருவிலாச் சிந்தையைத் தொலைக்கின்றோம்!

மானுடம் வெல்க அன்பின் வழி,
மனிதம் என்பதும் தான் வளரும்!
அழகு என்பது காட்சி நிலை;
அன்பு என்பது அறிவின் நிலை!

துன்பம் என்பது தொடரல்ல,
தொலைந்து போகும் தனி நிலையே!
இன்பம் பெருக என் செய்வோம்?
எவ்வுயிரிடத்தும் அன்பு கொள்வோம்!

உலகில் நமது அரசாட்சி,
ஓய்ந்த பின்னே எது நிறையும்?
ஒவ்வொரு உயிரும் மரித்திடவே,
உலகியல் தானும் தொடர்ந்திடுமே!

அழிவே என்றன் முடிவென்றால்,
ஆன்ற வாழ்வும் எதற்காக?
இயற்கை என்றே அதைச் சொன்னால்,
இறைவன் என்பவன் யாரவனோ?

உயிர்த்தும் அழித்தும் மகிழ்ந்திடுவோன்,
ஆண்டவன் என்றா பெயர் கொள்வான்?
இகத்தில் வாழ்வுதான் எதற்காக?
எதனால் நாமும் அலைகின்றோம்?

- கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்
07-08-2022 (01.10 PM)